# சுயதொழில் முயற்சியும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களும் - J/367 கிராமசேவையாளர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Vijitha Ravishankar[1]**

[1]Department of Economics, Faculty of Arts, University of Jaffna.
Correspondence: rviji2007@yahoo.com

## ஆய்வுச் சுருக்கம்

சர்வதேச ரீதியாக வறுமையை ஒழிப்பதற்கான ஓர் கருவியாக சுயதொழில்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும் . உள்ளார்ந்த மூலவளப்பயன்பாடு, வேவைவாய்ப்பு, தனிநபர் வருமானம், தேசிய உற்பத்தி, வருமான அதிகரிப்பு போன்றவற்றிற்கு சுயதொழில் முயற்சி பின்னணியாக அமைகிறது. வறிய மக்கள் சுயமாக செய்யக் கூடிய தொழில்களை விருத்தி செய்து கொள்வதற்குப் போதுமான நிதியினைப் பெற்றுக்பொள்வதில் பெரும் சிரமத்தினை எதிர் கொள்கின்றனர். இச்சிரமத்தினை நிவர்த்தி செய்யும் முகமாக அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும வங்கிகள் போன்றன நிதியுதவிகளை வழங்கி வருகின்றன. அந்த வகையில் இவ்வாய்வானது J/367 கிராமசேவையாளர் பிரிவினை அடிப்படையாக கொண்டு சுயதொழில் முயற்சிக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்வதில் கொண்டிருக்கும் பங்களிப்பினை ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டதாக அமைகின்றது. இவ் ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. முதலாம் நிலைத் தரவுகள் வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக சுய உதவித் தொகைகளை பெற்றுக் கொள்ளும் 60 பயனாளிகளை வருமானத்தின் அடிப்படையில் ஒவ்வொரு தொழில் செய்பவர்களிலும் 50 வீதமானோர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்குவதனூடாகவும், மற்றும் கலந்துரையாடல்கள், அவதானம் போன்றவற்றின் ஊடாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலகப் புள்ளிவிபரக் கையேடு, வாழ்வாதாரத் திட்ட அறிக்கை, கிராம அபிவிருத்தி அமைப்பின்ள கையேடு, இணையம் என்பவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு SPSS , Ms-Excel ஆகிய கணனி மென்பொருட்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. இங்கு வருமானம், கல்வி, சுகாதாரம், போன்ற குறிகாட்டிகள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகிறது. வருமான அதிகரிப்பானது பொருட்கள், சேவைகளை நுகர்வதற்கே செலவிடப்படுகின்றமையால் முதலீடுகளை ஏற்படுத்துவதில் இவர்கள் அதிக அக்கறை செலுத்துவதில்லை. இதன் விளைவாக சுயதொழிலாளிகளின் வாழ்க்கைத்தர மட்டமானது நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றமை முடிவாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப் பிரசே மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயர்ந்த மட்டத்தில் அதிகரிகிக வேண்டுமாயின் பெற்றுக்கொள்ளப்படும் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பிற்காக ஒதுக்க வேண்டும். இதன் மூலம் முதலீட்டினை அதிகரித்து மேலும் வருமானத்தினை அதிகரித்துக் கொள்ள முடியும் என இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**முதன்மை சொற்கள்:** சுயதொழில்கள், வாழ்வாதார அபிவிருத்தி திட்டம், வாழ்கைகைத்தரம்,

## 1. அறிமுகம்

உலகளாவிய ரீதியில் நோக்கும் போது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் பெருமளவிற்கு எதிர்நோக்குகின்ற பிரச்சினையாக வறுமை காணப்படுகிறது.சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வாழ்க்கைத்தர மட்டத்தை அடைய முடியாத நிலை அதாவது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையினை வறுமை எனலாம். .ஆசிய நாடுகளில் இலங்கையும் வறுமை எனும் பிரச்சினையை எதிர்நோக்குகின்றது. அபிவிருத்தி செயற்பாடுகள் பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் கூட இன்றும் இலங்கையில் வறுமையானது அதிகமாகவுள்ளது. (இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை 2015).

இவ் வறுமையானது நச்சு வட்டத்திற்கு இட்டுச் செல்வதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையும் பின்தள்ளப்படுகிறது. வறுமையின் நச்சுவட்டம் என்பது உற்பத்தி குறைவடைந்து சேமிப்பு குறைந்து அதனால் முதலீடு குறைவடைந்து வறுமைநிலைக்கு செல்வதனை குறிக்கின்றது. .இத்தகைய நச்சுவட்ட சூழலினை தணிப்பதனூடாக மக்களது வாழ்வாதாரத்தை விருத்தி செய்ய வேண்டிய தேவை பொறுப்புள்ள அரசின் தலையாய கடமையாகும். வறுமையை ஒழிப்பதற்கு பல்வேறு நாடுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசின் வாழ்வின் எழுச்சித் திட்டங்கள் எவ்வாறு சுயதொழில்களை ஊக்குவித்து வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துகின்றன என்பது முக்கியமானதாகும்.

சுயதொழில் செய்வோர்க்கு முடிந்தளவு கடன் மட்டுமல்லாது சேமிப்பு, காப்பீடு மற்றும் பணபரிமாற்றம் ஆகியவற்றையும் உள்ளிட்ட நிரந்தரமான தரமான சேவைக்கான அணுகல் கிடைக்கப்பெறும் நிலையை அடையச்செய்வதை நோக்கமாக கொண்டதே நுண்பாக நிதி ஆகும். (Asian Development Bank 2000) இது சிறியனவான கடன் தொகை ஆகும். வறியமக்கள் சிறியளவான தொழில்களையும் மற்றும் சுயமாக செயற்படக்கூடிய வகையிலும் தொழில்களை விருத்தி செய்து கொள்வதற்கு போதுமான நிதியினை பெற்று கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பெரும்பாலும் நுண்நிதி மூலமான சுயதொழில் கடன்கள் வருமானம் குறைந்த மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலேயே அக்கறை செலுத்துகின்றன. பல்வேறு அரச ஸ்தாபனங்கள், அரச வங்கிகள் சுயதொழிலுக்கான நுண்கடனை வழங்குகின்ற போதிலும் வெளிநாட்டு நிதியுதவியின் மூலமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுயஉதவிக்கடன்களை பெற்றுக் கொள்வது இலகுவானதாக காணப்படுவதோடு அரசாங்கத்தால் வழங்கப்படும் ஏனைய நுண்கடன் திட்டங்களை விட குறைந்த வட்டியுடன் கடன்களை பெற்று கொள்ள முடிகிறது. இத்தகைய நுண்நிதி நிறுவனங்களான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டமானது மக்களை தொழில் முயற்சிகளில் ஈடுபடச்செய்வதோடு அவர்களது வருமானத்தை அதிகரித்து அவர்களின் குழந்தைகளுக்கான கல்வி வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் உதவுகின்றது.

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டதில் இருந்து இன்று வரை வறுமையின் பிடியிலிருந்து விடுபட முடியாத நாடாக காணப்படுகின்றது. இதனால் காலத்திற்கு காலம் வந்த அரசாங்கங்கள் வறுமையை தணிப்பதற்கு பல்வேறு கொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இருப்பினும் மக்கள் கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் காரணமாக பொருளாதார ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி மீண்டும் வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்டனர். மகிந்த சிந்தனை பத்தாண்டு கால அபிவிருத்தி திட்டத்தில் ஓர் அங்கமாக வறுமைத் தணிப்பு நடவடிக்கை காணப்படுகின்ற போதிலும் வறுமையினளவு குறைவடையவில்லை. இதனால் சுயதொழில் முயற்சியினூடாக குடும்பங்களின்

பொருளாதார நடவடிக்கைகளை அதிகரித்து பணத்தினை சம்பாதிக்கும் பொருட்டு பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நுண்கடன்களை வழங்குகின்றன. அதன் மூலம் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் தாம் தற்போது மேற்கொள்ளும் சுயதொழில் முயற்சிகளை மேலும் அபிவிருத்தி செய்தும் புதிய தொழில்களை தொடங்குவதன் மூலம் வருமானத்தை பெற்று வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடிகிறது.

ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தின் உயர்விற்கு பிரதான பங்களிப்பு செய்யும் நுண்கடன் மூலமான சுய உதவிக்கடன்களின் வளர்ச்சிக்கு திறன்கள் , பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அணுகல்கள் ஆகியன பங்பளிப்பு செய்கின்றன. இதன் மூலம் புதிய தொழில்களை ஏற்படுத்தி நுண்கடன் திட்டங்களை பயனுள்ளதாக்க முடியும்.


பல்வேறு அரசநிறுவனங்கள் ஆய்வு பிரதேசமான யாழ்மாவட்டத்தில் கரவெட்டி மத்தி கிராமசேவையாளர் பிரிவில் ( J/367) சுய தொழில் கடன்களை வழங்கியுள்ள போதும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டமானது கிராமிய அபிவிருத்தியை கருத்தில் கொண்டு கிராமிய வறுமையை தணிக்கும் வகையில் வருமானம் குறைந்த மக்களுக்கு சுயதொழில் உதவிகளை வழங்கி வருகிறது. எனவே சுயதொழிலுக்காக வாழ்வாதார அபிவிருதிதித் திட்டத்தினூடாக வழங்கப்பட்டு வரும் உதவிகள் மக்களுக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் எத்தகைய பங்களிப்பை வழங்குகிறது என்பதை ஆராய்வதாக இவ் ஆய்வு காணப்படுகின்றது.இவ்வாய்வு 2016 - 2021 வரையிலான காலப் பகுதி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

## 2. ஆய்வு பிரதேசம்

இலங்கை தீவில் உள்ள முக்கிய மாவட்டங்களில் ஒன்றாக யாழ் மாவட்டமானது காணப்படுகின்றது. இம்மாவட்டம் 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் , 435 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டது. அத்துடன் வடமராட்சி , தென்மராட்சி , வலிகாமம் , தீவகம் எனும் பகுதிகளை கொண்டது. வடமராட்சி பிரதேசமானது வடமராட்சி தெற்கு மேற்கு , வடமராட்சி கிழக்கு , வடமராட்சி வடக்கு எனும் நான்கு உப பிரிவுகளை கொண்டது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் கரவெட்டி பிரதேசமானது காணப்படுகின்றது. கரவெட்டி பிரதேசத்தில் கரவெட்டி மத்தி எனும் சிறிய கிராமம் (J/367) உள்ளது. இக் கிராமத்திற்கு வடக்கே நெல்லியடியையும் கிழக்கே கட்டைவேலி எனும் கிராமமும் தெற்கே கப்பூது பிரதேசத்தையும மேற்கே மத்தொனி கிராமத்தையும் எல்லையாக கொண்டுள்ளது. இந்த பிரிவுக்குள் அடங்கும் சுயதொழில் முயற்சியாளர்களின் நிலைமை ஆய்வு செய்யப்படுகிறது.

ஆய்வுக் கிராமத்தில் 466 குடும்பங்கள் காணப்படுகின்றது. இவற்றில் 87 குடும்பங்கள் சமுர்த்தி பயளாளிகளாகவும் , 100 குடும்பங்கள் திவிநெகும பயனாளிகளாகவும் , 52 குடும்பங்கள் 70 வயதிற்கு மேற்பட்ட உதவிப்பணம் பெறுபவர்களாகவும் , 107 குடும்பங்கள் பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களாகவும் 120 குடும்பங்கள் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் பெறும் பயனாளிகளாகவும் காணப்படுகின்றனர்.

**ஆய்வுப் பிரதேச விளக்கப் படம்**









*மூலம்: கரவெட்டி*
*பிரதேச செயலகம்*

## 3. ஆய்வு நோக்கம்

வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்படும் உதவித் தொகைகள் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கண்டறிவது பிரதான நோக்கமாகும்.

***உப நோக்கம்***

1. வாழ்வாதார அபிவிருத்தி திட்டம் மூலம் பெறப்படும் நன்மைகள் குடும்ப வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தை அறிதல்.
2. சுயதொழில் மூலம் பெறப்படும் வருமானம் மூலம் சேமிப்பு முதலீடு ஏற்படுத்தப்படுகிறதா என கண்டறிதல்.
3. வாழ்வாதார அபிவிருத்தி திட்டம் வறுமையை குறைத்துள்ளதா என கண்டறிதல்.

## 4. ஆய்வு வினா

- ✓ சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுகிறதா?
- ✓ சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே சாதகமான தன்மை காணப்படுகிறதா?
- ✓ வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் முதலீடுகளை தூண்டி தொழில்
- ✓ முயற்சிகளை விருத்தி செய்துள்ளதா?

## 5. ஆய்வின் கருதுகோள்கள்

$H_1$: சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுகிறது.

$H_2$: சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே சாதகமான தன்மை காணப்படுகிறது

$H_3$: வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் முதலீடுகளை தூண்டி தொழில் முயற்சிகளை விருத்தி செய்துள்ளது

## 6. முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வு

R. Silva (2007) "நுண்கடன் மூலமான சுய உதவிக்கடன்கள் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கம்" இவ்வாய்வு நுண்கடன் மூலமான சுய உதவிக்கடன்கள் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வதை நோக்காகக் கொண்டது. இது இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் ஆய்வானது முதலாம் ,மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவின்படி வழங்கப்படுகின்ற நுண்கடன் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தமது வறுமை நிலையிலிருந்து மீள முடிவதோடு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றது எனவும் கூறுகிறார்.

Khan and Rahman (2007) "ஏழைமக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதிலும் வலுவூட்டவதிலும் வறுமையைக் குறைப்பதிலும் நுண்கடனின் தாக்கம் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட மாற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான மாறியாக வருமானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவின்படி நுண்கடன் பெற்றுக்கொண்டதன் பின்னர் வருமானமானது 11.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதோடு வருமானம் மீது நுண்கடன் நேரான தாக்கத்தை செலுத்தியுள்ளது என தெரிவித்தனர். இவ் ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விவரணரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Mohammed Nural Alam (2009) "Interest free microfinance to micro entrepreneur in rural bangaladesh" குடும்ப வருமானம் சேமிப்பு போன்ற மாறிகளைப் பயன்படுத்தி முதலாம்தர தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவர் வட்டியில்லா

கடன்களை வழங்கும் நிறுவனங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளார். இங்கு இவ்வாறான வளங்கள் கிராமிய வறிய முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இவர்கள் சொத்துக்களை திரட்டிக்கொள்ளவும் கஸ்ரமான நாட்களில் நுகர்வு மட்டங்களைப் பேணிக்கொள்ளவும் இத்தகைய கடன்கள் வழிவகுக்கும் என கூறப்படுகின்றது. இதன் மூலம் இவர்களுடைய வறுமை நீங்குவதோடு மட்டுமல்லாது சமூகத்தையும் வெற்றிகரமான சமநிலையுடன் நிறுவக்கூடிய நிலைமை ஏற்படும். இதன்படி இத்தகைய வட்டியல்லாக்கடன்கள் கிராமிய மக்களின் அபிவிருத்திக்கு அவசியம் என்ற கருத்தை முடிவில் வெளிப்படுத்தினார்.

Srivastara, 2009 " வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ஊழியப்படையில் பெண்களின் பங்கு" வளச்சியடைந்து வரும் நாடுகளில் பெண்களின் ஊழியப்படை பங்குபற்றலுக்கு ஆதரவளிக்கும் முக்கிய கூறுகளில் ஒன்றாக சுயதொழில்கள் காணப்படுகின்றன. வாழ்நாளில் சுயமாக வாழ்வதற்கான வருமான வளத்தினை வழங்குவதுடன் குறிப்பாக பெண்களுக்கு வீட்டில் இருந்துகொண்டு அவர்களது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வீட்டினை நிர்வகிப்பதற்குரிய அதிகாரத்தினையும் வழங்குகின்றன. இந்தியாவில் 80 வீதமான பெண்கள் வீட்டிலிருந்து சுய தொழில்களை மேறகொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Kesavaraj (2010) "வறுமையைக் குறைப்பதில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு" 1995- 2008 காலப்பகுதியில் இலங்கையில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு மட்டங்களை சிறிது அதிகரித்தால் வறுமையை குறைத்து அபிவிருத்தி இலக்குகளை அதாவது மனித அபிவிருத்தி ஊழியரின் உற்பத்தி அபிவிருத்தி கல்வி மற்றும் சுகாதார விருத்தி போன்றவற்றை அடைய முடியும் என ஆய்வு முடிவு தெளிவுபடுத்துகின்றது.

Thileepan and Thiruchelvam (2011) "நுண்பாக நிதியும் கிழக்கிலங்கை கடலோர சமூகத்தில் வறிய மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியும்" வாழ்க்கைத்தர விருத்தியில் நுண்கடன் செலுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவதை பிரதான நோக்காக கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது நுண்நிதி வழங்கப்பட்ட பின்னர் வருமானமானது 67 சதவீதமாக அதிகரித்துள்ளது எனவும் கால்நடை துறையில் கோழிவளர்ப்பதன் மூலம் வருமானத்தை அதிகமாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கூறுகின்றார். இவ் ஆய்வானது முதலாம் நிலை தரவுகளை பயன்படுத்தி பிற்செலவு அணுகுமுறை ஊடாக ஆய்வின் முடிவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது. Suniya , (2013) "வறுமை ஒழிப்பின் மீதான நுண்நிதியின் தாக்கம்" பாகிஸ்தானின் பஹவல்பூர் மாவட்டத்தில் முதலாம் நிலை தரவுகளைப் பயன்படுத்தி விவரணரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. இங்கு சுயதொழிலாளர்களில் 67 வீதமானவர்களின் வருமானமானது சுயஉதவிக்கடன்களை பெற்று கொண்டதன் மூலம் அதிகரித்துள்ளது எனவும் அவர்களது வாழ்க்கைத்தரமட்டம் அதிகரித்துள்ளது என்பன முடிவாக பெறப்பட்டுள்ளது

Alexander Ferka (2011) ) " The Impact of Microfinance on the livelihoods of women in rural communities: A case study of Jaman South District, Ghana"இவ்வாய்வு கானாவில் கிராமிய சமூகத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தில் நுண்நிதியின் பங்கு என்பது பற்றியதாக அமைகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றான கானாவில் மொத்த சனத்தொகையில் 52% ஆனவர்கள் பெண்களாகவும் கிராமப்புறங்களில் வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர். கானாவில் கிராமிய சமூகத்தினருக்கு விரிவான நிதி வசதிகள் தேவைப்பட்டன.இதற்கு ஆதரவளிக்கும் வகையில் கிராமிய மற்றும் சமூக வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை குறைந்த வருமானம் பெறும் தமது வாடிக்கையாளர்களை இலக்காகக்கொண்டு அவர்களுக்கு சிறிய கடன் வசதிகள் மற்றும் சேமிப்பு தொழில் வசதிகள்,

மாற்றல் சேவைகள் போன்றவற்றை சிறிய தொழில் முயற்சிகளுக்காக வழங்கியது. இவ்வாய்வு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளின்படி விரிவான கடன் வசதிகள் சேமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனூடாகப் பெண்களின் வியாபார நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருமான அதிகரிப்பானது ஏற்பட்டுள்ளது. வருமான அதிகரிப்பானது அவர்களது குடும்பங்களுக்கு நல்ல சுகாதார வசதி, கல்வி வசதிகளைப் பெறவும் சொத்துக்களை அதிகரிக்கவும், பெண்கள் குடும்பத்தில் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உள்ளவர்களாக மாற்றவும் உதவியுள்ளது. அத்துடன் நிதிச்சேவைகளுக்காகப் பெண்கள் நிதிசார் கல்வி கற்பதை ஊக்கிவிக்க வெண்டும், நுண்நிதி நிதிநிறுவனங்கள் கிராமப்புறங்களில் நிறுவப்பட வேண்டும் எனவும் சிபார்சு செய்யப்பட்டது.

“இலங்கையின் வடக்கு கிழக்கு யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தியில் வங்கிசேவைகள் (2011) பொருளியல் நோக்கு” யுத்த நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து பொது உட்கட்டுமான அபிவிருத்தியில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. திருகோணமலை முல்லைத்தீவு யாழ்ப்பாணம் முதலான போக்குவரத்து வலையமைப்புக்கள் நகரங்களுடன் இணைக்கப்படுதல் போன்ற பல்முனை பாரிய பொது உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன. அதே வேளை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதார மீட்சிக்கான நடவடிக்கைகளிலும் அரசு பங்களிப்பு வழங்குகின்றது.

Suniya , (2013) “வறுமை ஒழிப்பின் மீதான நுண்நிதியின் தாக்கம்” பாகிஸ்தானின் பஹவல்பூர் மாவட்டத்தில் முதலாம் நிலை தரவுகளைப் பயன்படுத்தி விவரணரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. இங்கு சுயதொழிலாளர்களில் 67 வீதமானவர்களின் வருமானமானது சுயஉதவிக்கடன்களை பெற்று கொண்டதன் மூலம் அதிகரித்துள்ளது எனவும் அவர்களது வாழ்க்கைத்தரமட்டம் அதிகரித்துள்ளது என்பன முடிவாக பெறப்பட்டுள்ளது

இவ்வகையில் பல்வேறு நாடுகளில் சுயதொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்காக பல உதவித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் இவ்வாய்வுப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டதினூடாக சுயதொழில் அபிவிருதிதி ஏற்பட்டு மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு பற்றிய ஆய்வுகள் எவையும் மேற்கொள்ப்படாமையினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 7. ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் என்பது ஆய்வு பிரச்சினையை இனங்கண்ட பின்னர் அது தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தும் முகமாக ஒழுங்கு முறையான கட்டமைக்கப்பட்ட செயன்முறைக்கு உட்படுத்தி பொருத்தமான தரவுகளை சேகரித்து அதனூடாக பொருத்தமான விடயத்தை வெளிப்படுத்துகின்ற ஓர் முறைமைப்படுத்தப்பட்ட செய்முறையாகும். ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள குறிக்கப்பட்ட குடும்பங்களினை தெரிவு செய்து வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களின் ஊடாக சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட மாற்றங்களினை அறிந்து கொள்வதற்காக முன்வைக்கப்படும் ஆய்வு அணுகுமுறையாக அளவு மற்றும் பண்புரீதியான அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றது. சமூக விஞ்ஞான ஆய்வுகூடத்தில் கட்டுப்பாடான சூழலில் வைத்து ஆய்வை மேற்கொள்ள முடியாது இதனால் பண்பார்ந்த தரவுகளே அதிகம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது

ஆய்வினை மேற்கொள்வதற்கு தகவல்களும் தரவுகளும் மிகவும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. ஆய்வினை மேற்கொள்வதற்கு தரவு சேகரித்தல் ஒரு முக்கிய படிமுறையாக உள்ளது. இங்கு அண்மைக்காலத்தில் நுகர்வு அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தினை ஆய்வு செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு அளவு ரீதியாகவும் பண்புரீதியாகவும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.


முதலாம் நிலைத்தரவுகள் ஆய்வாளனால் நேரடியாகப் பெறப்படுவதனால் அதிகளவு நம்பகத்தன்மையுடையதாகவும் உண்மைத்தன்யுைடையதாகவும் காணப்படுகிறது. இவை பல வழிகளில் பெறப்படுகின்றது. இவ் ஆய்வில் பின்வரும் நுட்பங்கள் முதலாம் நிலைத்தரவுகள் பெறுவதற்கு பயன்படுத்தப்பட்டவை. முதலாம் நிலைத்தரவுகளானவை வினாக்கொத்து வடிவில் கரவெட்டி J/367 கிராமசேவகர் பிரிவில் வாழும் சுயதொழிலாளர்களிடம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. வினாக்கொத்துக்கள் திறந்த வினாக்களை உடையதாகவும் அமைந்துள்ளது. வினாக்கொத்து (iresr Scale) இல் அமைக்கப்பட்டு உயர் அளவில் ஏற்றுக்கொள்கின்றேன். ஏற்றுக்கொள்ளவில்லை முற்றாக ஏற்றுக்கொள்ளவில்லை எனும் ஒழுங்கு முறையில் தமது சரியான தெரிவினை தெரிவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள் ஆய்வுக்கட்டுரைள் சஞ்சிகைகள் புத்தகங்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளாக காணப்படுகின்றன. இவ் ஆய்வுக்கு தேவையான புள்ளிவிபரங்கள் மற்றும் முறைசார் தகவல்கள் என்பன வடமராட்சி தெற்கு மேற்கு பிரதெச செயலகம் புள்ளிவிபரவியல் அறிக்கைகள் , இணையதளங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளாக பெறப்பட்டவையாகும்.

நடைமுறையில் ஓர் ஆய்வினை மேற்கொள்வதற்கு முழுக்குடியையும் பயன்படுத்தி செம்மையாகவும் வினைத்திறனாகவும் ஆய்வு செய்து முடிவைப் பெறுவது என்பது மிகவும் கடினமான முறையாகும். எனவே முழுக்குடியிலுள்ள சுயதொழிலாளர்களில் சராசரி மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் இப்பிரதேசத்தில் 120 சுயதொழிலாளர்கள் கால்நடை வளாப்பு, சிறுகைத்தொழில், ஏனைய சுயதொழில் முயற்சிகள் போன்ற சுயதொழில்களுக்காக சுய உதவி தொகைகளை பெறுகின்றனா். இதில் மேற்கொள்ளப்படும் சுயதொழில்களின் விகிதாசார அடிப்படையில் 60 நபா்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. புள்ளிவிபரவியல் ரீதியான தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்யும் போது மிகத் துல்லியமான முடிவினை பெறமுடியும். இப்பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக அத்தரவுகளுக்கிடையிலான தொடர்பை பரிசீலனை செய்யும் பொருட்டு ளுிளள இ ஆழை௨சழளழகவ நஒ௨நட கணணி மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் வாழ்வாதாரஅபிவருத்தித் திட்டங்களின்பங்களிப்புத் தொடரபான இவ்வாய்வில் வாழக்கைத்தரமானது சார் மாறியாகவும் வருமானம், சேமிப்பு, முதலீடு, கல்வி, என்பன சாரா மாறியாகவும் கொள்ளப்படுகின்றன.

**எண்ணக்கரு சட்டகம்**



## 8. தரவுப்பகுப்பாய்வும் கருதுகோள் பரிசீலனையும்

இவ் ஆய்வின் பொருட்டு உருவாக்கப்பட்ட கருதுகோளை பரிசீலிப்பதற்காக முதலாவது கருதுகோள் எடுக்கப்படுகிறது.

**H1: சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுகிறது.**

வருமானம் என்பது ஒரு குடும்பம் அல்லது தனிநபர் தனது வாழ்க்கையை கொண்டு நடாத்த போதுமான ஒரு மூலதனம் ஆகும். அந்த வகையில் 60 சுயதொழில் முயற்சியாளர்களும் பெற்ற வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் எவ்வாறு அவர்களின் வருமானத்தை உயர்த்தியுள்ளது என்பதனை அட்டவணை காட்டுகின்றறது.

**அட்டவணை 1: வாழ்வாதார அபிவிருதிதி திட்ட உதவிகளைப் பெற முன்னரும் பெற்ற பின்னரும் சுயதொழில் முயந்சியாளர்களின் வருமானம்**

| **வருமானம்** | **வாழ்வாதார .அபிவிருத்தி திட்ட உதவியின் .முன் .வருமானம் %** | **வுாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவியின் பின் வருமானம் %** |
|---|---|---|
| 5000 ற்கு கீழ் | 43.3 | - |
| 5001-10000 | 51.7 | 1.7 |
| 10000-15000 | 5 | 16.7 |
| 16000-20000 | - | 46.7 |
| 25000ற்கு மேல் | - | 35 |

(மூலம்: கள ஆய்வு 2021)

அட்டவணையின் படி சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானம் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளின் பின்னர் 16000 – 20000 வரையில் வருமானம் பெறுபவர்கள் 46.7 வீதமாக அதிகரித்ததோடு 20000 ற்கு மேல் வருமானம் பெறுபவர்களின் வீதம் 35 ஆகவும் காணப்படுகின்றமை தெளிவாக தெரிகின்றது. எனவே வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்திற்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது.

**H2: சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளிற்கும் இடையே சாதகமான தன்மை காணப்படுகிறது**.

வாழ்க்கைத்தரம் என்பது ஒருவர் ஒரு சமூகத்தில் பிறரைப் போன்று வாய்ப்புக்களைப் பெற்று சமூக ரீதியாக குறிப்பிடக்கூடிய அந்தஸ்தினைப் பெற்று வாழ்வதற்கு தேவையான உணவு , உடை , உறையுள் , கல்வி , சுகாதாரம் , மின்சார வசதி , போன்றவற்றினைப் பூர்த்தி செய்திருக்கின்ற நிலையினைக் குறிக்கிறது. இப் பிரதேசத்தில் சுயதொழில்முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களினால் வழங்கப்படுத் உதவிகளும் அதனால் பெற்றுக்கொள்ளப்படும் வருமானமும் வாழ்க்கைத்தரத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை பற்றியதாக அமைந்துள்ளது.

**அட்டவணை 2: விபரணப் புள்ளி விபரவியல் பகுப்பாய்வு முடிவு**

| **கல்வி** | **இடைப் பெறுமானம்** | **நியம விலகல்** |
|---|---|---|
| உயர்கல்வியை பெற முடிகிறது | 4.0500 | 0.3873 |
| பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லமுடிதல் | 3.7833 | 0.58488 |
| பாடசாலைக்கல்வியில் முன்னேற்றம் காணப்படுகிறது | 3.8500 | 0.48099 |
| சுயதொழில் வருமானம் கல்விக்கு உதவுகிறது | 3.9667 | 0.60971 |
| **சுகாதாரம்** | | |
| போதுமான வீட்டு வசதிகள் உள்ளது | 3.9333 | .48246 |
| சுத்தமான குடிநீர் கிடைக்கிறது | 2.4833 | .65073 |
| போசாக்கான உணவு கிடைக்க கூடியதாக உள்ளமை | 3.9000 | .51090 |
| **சேமிப்பு** | | |
| பெறப்படும் வருமாானம் மூலம் முறைசாரா கடனிலிருந்து விலக முடிதல் | 3.8833 | 0.58488 |
| சேமிப்பு பழக்கம் அதிகரித்துள்ளது | 3.4667 | 0.56648 |
| சேமிப்பினால் வட்டி வருமானம் கிடைக்கிறது | 3.0667 | 0.60693 |
| வங்கிகளில் மேிப்பு மேலும் ஊக்குவிக்கப்படுகிறது | 3.2667 | 0.5164 |
| சேமிப்பு முதலீடாக தொழிற்படுகிறது | 2.8000 | 0.81926 |

(மூலம்: கள ஆய்வு 2021)

கல்வி மாறியின் பகுப்பாய்வு முடிவுகளின்படி உயர் கல்வியைத் தொடர உதவுகின்றது (4.05), கல்வியில் முன்னேற்றம் காணப்படுகின்றது (3.85), வருமானம் கல்விக்கு உதவுகின்றது (3.9) , பிரத்தியேக வகுப்புகளிற்கு செல்ல முடிதல் (3.78) ஆகிய கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $3.5 \leq x \leq 5$ என்ற வீச்சுப் பெறுமானத்தில் உயர்மட்டமாக காணப்படுகின்றது. இதனால் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமான அதிகரிப்பில் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களின் பங்களிப்பு நேர்க்கணிய தாக்கத்தை ஏற்படுத்தியமையை அறியக்கூடியதாகவுள்ளது. கல்வி மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவிலிருந்து கல்வி மாறிகளின் சராசரி இடைப்பெறுமானம் 3.9125 ஆகவும் சராசரி நியம விலகல் 0.51572 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq X \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதனால் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களினால் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானம் அதிகரித்து அவர்களின் கல்வியிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

பகுப்பாய்வு முடிவுகளின்படி போஷாக்கான உணவு கிடைக்கின்றது (3.9) , போதுமான வீட்டு வசதிகள் காணப்படுகிறதுது (3.9) ஆகிய கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $3.5 \leq x \leq 5$ என்ற வீச்சுப் பெறுமானத்தில் உயர் மட்டமாக காணப்படுகின்றது மேலும் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொள்வது குறைந்த அடைவுமட்டததிலேயே காணப்படுகின்றது.(2.4) . இங்கு குடிநீருக்கு பற்றாக்குறை நிலவுதலும் ஒரு காரணமாகும்.

சுகாதார குறிகாட்டிகளின் மொத்த பகுப்பாய்வின் படி சராசரி இடைப்பெறுமானம் 3.438867 ஆகவும் சராசரி நியமவிலகல் 0.54803 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $2.5 \leq x \leq 3.5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதனால் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகளின் பின்னர் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானம் நடுத்தரமட்டத்தில் அவர்களின் சுகாதார வசதிகளிற்கு பங்காற்றியுள்ளது என்பதனை அறியமுடிகிறது.

பகுப்பாய்வின் படி முறை சாரா கடன்களிலிருந்து விலக முடிகின்றது(3.88), உயர்ந்த அடைவ மட்டத்தினையும் வட்டி வருமானத்தை பெற முடிகின்றது(3.30), சேமிப்பு பழக்கம் அதிகரித்துள்ளுத (3.46), சேமிப்பு ஊக்குவிக்கப்படுகின்றது (3.26) , சேமிப்பு முதலீடாகின்றது (2.8) ஆகிய கூற்றுக்களின் இடைப் பெறுமானமானது $2.5 \leq x \leq 3.5$ என்ற வீச்சினுள் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றன. இதற்கு பிரதான காரணமாக அமைவது சேமிப்பு பற்றிய விளக்கம் அவர்களிடத்தில் காணப்பட வில்லை என்பதும் வங்கிப்பழக்கம் குறைவாக இருப்பதுமாகும். மேலும் சீட்டு மற்றும் உண்டியல்களில் சிறிதளவில் சேமிக்கப்படும் பணம் தமக்கு முதலீடாக பயன்படுகின்றது என்பதனாலாகும்.

சேமிப்பு குறிகாட்டியின் மொத்த பகுப்பாய்வின் படி சராசரி இடைப்பெறுமானம் 3.29668 ஆகவும் சராசரி நியமவிலகல் 0.58488 ஆகவும் காணப்படுகிறது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq x \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதனால வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களிலான வருமானத்திற்கும் சேமிப்பிற்கும் இடையே உயர்ந்த அடைவுமட்டம் காணப்படுகின்றது.

வாழ்க்கைத்தரம் என்ற வகையில் வருமானம், கல்வி , சுகாதாரம், சேமிப்பு , முதலீடு ஆகிய குறிகாட்டிகளின் இடைப்பெறுமானம் முறையே 3.9125 , 3.43887, 3.29688, 3.09 காணப்படுகின்றது. இவ் குறிகாட்டிகளின் சராசரிப்பெறுமானங்களின் அடிப்படையில் இவற்றின் சராசரிப் பெறுமதி 3.480456 ஆகும். இவ் பெறுமானம் $2.5 \leq x < 3.5$ என்ற வீச்சினுள் காணப்படுவதனால் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் மூலமாக சுயதொழில் முயற்சியாளர்களின் வருமான அதிகரிப்பின் மூலம் சுயதொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றது.

### H3: வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் முதலீடுகளை தூண்டி தொழில் முயற்சிகளை விருத்தி செய்துள்ளது

வருமானம் குறைந்த பிரிவினர் தமது சுயதொழில்களை மேற்கொள்வதற்காகவும் விருத்தி செய்வதற்காகவும் வாழ்வாதார அபிவிருத்தி திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.அந்த வகையில் சுயதொழில் முயற்சியால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் எவ்வாறு முதலீடுகளை அதிகரித்துள்ளது என்பதனை மதிப்பீடு செய்வதற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்தில் வருமானம் முதலீடு செய்ய தூண்டுகின்றதா, முதலீட்டின் மூலம் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளது , முதலீட்டின் மூலம் முன்னனரை விட வருமானம் அதிகரிக்கின்றது , முதலீடு முன்னரை விட அதிகரிக்கின்றது ,சொத்துக்களை விஸ்தரிக்க கூடியதாக உள்ளது ஆகிய குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன.

**அட்டவணை 3 முதலீட்டுக் குறிகாட்டிகளின் பகுப்பாய்வு**

| முதலீடு | இடைப் பெறுமானம் | நியம விலகல் |
|---|---|---|
| சுயதொழில் வருமானம் முதலீட்டுக்கு பயன்படுகிறது | 3.2500 | 0.43667 |
| முதலீடு முன்னரை விட அதிகரிக்கின்றது | 3.1667 | 0.37582 |
| முதலீடுகள் மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது | 2.6333 | 0.60971 |
| முதலீடுகளால் வருமானம் முன்னரை விட அதிகரித்துள்ளது | 3.1167 | 0.52373 |
| தொழில் விஸ்தரிப்பால் சொத்துக்கள் அதிகரித்துள்ளது | 3.2833 | 0.61318 |

(மூலம்: கள ஆய்வு 2021)

முதலீட்டுமாறியின் பகுப்பாய்வு முடிவுகளின்படி வருமானம் மீள்முதலீடாகின்றது (3.2500), வேலைவாய்ப்பினை ஏற்படுத்த கூடியதாக உள்ளது (2.633), வருமானம் மேலும் அதிகரித்துள்ளது (3.1167), தொழில் விஸ்தரிப்பால் சொத்துக்கள் அதிகரித்துள்ளது (3.2833) , முதலீடு முன்னரை விட அதிகரிக்கின்றது (3.1667) ஆகிய கூற்றுக்களின் இடைப் பெறுமானம; $2.5 \leq x < 3.5$ என்ற வீச்சுப் பெறுமானத்தினுள் காணப்படுவதால் இக்கூற்றுக்களின் ஏற்றுக் கொளள்ல் நிலை நடுத்தரமட்டமாக காணப்படுகின்றது. இதற்கு காரணம் அவர்களிடத்தில் சேமிப்பு பற்றிய அறிவு போதியதாக காணப்படாமையாகும்

இங்கு முதலீட்டின் சராசரி இடைப் பெறுமானம் 3.09 ஆகவும், சராசரி நியம விலகல் பெறுமானம் 0.51822 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப் பெறுமானம் $2.5 \leq x < 3.5$ என்ற வீச்சினுள் காணப்படுவதால் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் மூலமான உதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர் சுயதொழிலாளர்களின் முதலீட்டு மட்டமானது நடுத்தரமட்டத்தில் காணப்படுகின்றது.

***பிற்செலவு பகுப்பாய்வு மாதிரி***

**வருமானம் , கல்வி , முதலீடு , சேமிப்பு காரணிகளினால் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரம் பற்றிய பிற்செலவு பகுப்பாய்வு முறை**

**அட்டவணை 4: பிற்செலவு பகுப்பாய்வு மாதிரி**

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .982[a] | .963 | .961 | .06078 |

a. Predictors: (Constant), வருமானம் கல்வி முதலீடு சேமிப்பு

இங்கு பிற்செலவு மாதிரியில் $R^2$ = .963 ஆகும். இதன் கருத்து யாதெனில் மொத்த வாழ்க்கைத்தர விருத்தியில் வருமானம் , சேமிப்பு , முதலீடு , வருமானம் ஆகிய காரணிகளின் ஒரு அலகு அதிகரிப்பால் 96.3 % செல்வாக்கு செலுத்துகின்றது. .3.7% ஏனைய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றது.

**Coefficients[a]**

| Model | | Unstandardized Coefficients | | Standardized Coefficients | t | Sig. |
|---|---|---|---|---|---|---|
| | | B | Std. Error | Beta | | |
| 1 | (Constant) | .261 | .091 | | 2.871 | .006 |
| | முதலீடு | .206 | .031 | .255 | 6.550 | .000 |
| | சேமிப்பு | .216 | .027 | .318 | 8.128 | .000 |
| | கல்வி | .254 | .024 | .316 | 10.536 | .000 |
| | வருமானம் | .241 | .030 | .310 | 8.106 | .000 |

a. Dependent Variable: வாழ்க்கைதரம்

**மாதிரி** $\boldsymbol{LS = a + \beta_1 I + \beta_2 S + \beta_3 E + \beta_4 Y + U}$

$LS =$ வாழ்க்கைத்தர மாற்றம்

$I =$ முதலீடு

$S =$ சேமிப்பு

$E =$ கல்வி

$Y =$ வருமானம் $\boldsymbol{LS = 0.261 + 0.206I + 0.125S + 0.086E + 0.145Y + U}$

$$(.\mathbf{006}) + (.\mathbf{000}) + (.\mathbf{000}) + (.\mathbf{000}) + (.\mathbf{000})$$

பிற்செலவுப் பகுப்பாய்வு அடிப்படையில் வாழ்க்கைத்தர மாற்றத்துடன் சம்மந்தப்பட்ட காரணிகளில் ஏற்படும் மாற்றத்திற்கும் வாழ்க்கைத்தர மாற்றத்திற்கும் இடையே நேர்க்கனிய தொடர்பு காணப்படுகிறது.

சேமிப்பில் ஏற்படும் 1அலகு அதிகரிப்பானது 26 வீத தாக்கத்தினையும் , முதலீட்டில் ஏற்படும் 1அலகு அதிகரிப்பானது 20 வீத தாக்கத்தினையும் , கல்வியில் ஏற்படும் 1அலகு அதிகரிப்பானது 8 வீத தாக்கத்தினையும் , வருமானத்தில் ஏற்படும் 1 அலகு அதிகரிப்பானது 14 வீத தாக்கத்தினையும் செலுத்துகின்றது என்பதனை இம் மாதிரி விளக்குகின்றது.

கருதுகோள்களின் முடிவின் படி வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களின் உதவிகள் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்திலும் வாழ்க்கைத்தர்திலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதோடு முதலீட்டிலும் சிறிதளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதனை நிரூபிக்க முடிகின்றது.

## 10. முடிவுகளும் பரிந்துரைகளும்

வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்படும் நுண்நிதி உதவிகள் J/367 சுயதொழில் முயறசியாளாக்ளின் வாழ்க்கைத்தரத்தினை மதிப்பிடுவது தொடர்பான ஆய்வின் முடிவுகளையும் அதற்கு பொருத்தமுடையதான சிபர்சுகளையும் கொண்டதாக காணப்படுகின்றது. இங்கு J/367 கிராமசேவகர் பிரிவிலுள்ள சுயதொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அறியக்கூடியதாக அமைந்துள்ளது.

இவ் ஆய்வு முடிவின்படி சுயதொழில் முயற்சியாளர்களின் கல்வி நிலையானது 3.9125 என்ற இடை மதிப்புடன் உயாந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் வருமானம் அதிகரித்தமையினால் கல்விக்காக செலவிடும் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகளை பிரத்தியேக வகுப்பிற்கு அனுப்பக் கூடியதாகவுள்ளதோடு உயர் கல்வியையும் பெற்றுக் கொடுக்க கூடியதாகவுள்ளதுடன் கற்றலுக்கான சூழ்நிலை பெற்றோர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வின்படி சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்திலேற்பட்ட மாற்றங்களினை மதிப்பீடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளபட்ட மாறிகளில் ஒன்றாகிய சுகாதார மாறியானது நுண்கடன் மூலமான சுய உதவிக் கடன்கள் வழங்கப்பட்டதன் பின்னா் உயாந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இங்கு இடை மதிப்பீடானது 3.438 ஆக காணப்படுகின்றது.

ஆய்வு முடிவின்படி சேமிப்பு மட்டமானது 3.296 என்ற இடை மதிப்புடன் நடுத்தர மட்டத்திலேயே காணப்படுகின்றது. இங்கு அதிகரிக்கப்பட்ட வருமானம் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்படுகின்றமை, சேமிப்பு பற்றி அவர்கள் அக்கறை கொளள்ாமை, சேமிப்பு தொடர்பான விளக்கமின்மை போன்ற காரணங்களால் சேமிக்கும் தன்மை குறைவாக காணப்படுகின்றது.

வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்படுகின்ற சுயதொழில் உதவிகள் மூலமாக மேறகொள்ளப்படும் சுயதொழில்களினூடாக பெற்றுக் கொள்ளப்படும் வருமானம் மீள்முதலீடு செய்ய பயன்படுகின்றது என்பதை ஆராய்தல் ஆய்வின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. ஆய்வு முடிவின்படி முதலீட்டு மட்டமானது 3.09 என்ற இடை மதிப்புடன் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றது.

சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்வதில் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் குறிப்பிட்ட தொழிலை மேற்கொள்பவர்க்கு அதனுடன் தொடர்புடைய வகையில் உதவிகளிற்கான தெரிவு அமைய வேண்டும்.

ஆய்வினூடாக இப் பிரதேச சுயதொழில் முயற்சியாளர்கள் பெருமளவில் வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்வதில் அக்கறை கொள்பவர்களாக இருந்தாலும் கிடைக்கின்ற சேமிப்பை முதலீடாக மாற்றி கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடும் தன்மை நடுத்தர மட்டத்திலேயே காணப்படுகிறது. இதனால் அவர்களுக்கு முதலீட்டு திட்டங்களை விருத்தி செய்வது பற்றிய செயற்திட்டங்களை வழங்கி அதனூடாக பயிற்சிகளை வழங்கி சுயதொழில் செய்பவர்களை முதலீட்டாளர்களாக மாற்றி ஒரு முயற்சியாளராக மாற்றிக்கொள்ள இயலும்.

இவ்வாறான மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்வதன் ஊடாக பிரதேச விருத்தி ஏற்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியாக அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். இவ் ஆய்வானது ஏனைய உதவித்திட்டங்களுடன் ஒப்பிடுவதற்கும் ஏதுவாக அமையும்.

**உசாத்துணைகள்**

*இலங்கையின் வடக்கு கிழக்கு யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தியிலவங்கிசேவைகள் பொருளியல் நோக்கு (மக்கள ˙ வங்கி)* (ஏழட. 30). (ெ.ன.).

.Mohammed, N. (2009). *Interest-Free Micro finance to Micro Entreprenuer in Rural Bangaladesh , A Case study in Rural Bangalades.*

(2015). Colombo: Central Bank of Sri Lanka. Retrieved 2015

De Silva, D. (2002). *Commerialization of Microfinance Sri Lanka, Manila, .*

Ferka, A. (2011). *The Impact of Microfinance on the livelihoods.* Retrieved from http://ir.knust.edu.gh/bitstream/123456789/4247/1/ALEXANDER%20F

Halid, M. e. (2002). *Micro Finance and Poverty Alleviation: Experience of the .*

hilakaradna.M. (2005). *Microfinance In Sri Lanka: A House Hold Analysis Of Outreach And Impact On Poverty, Institute Of Policy Studies Of Srilanka.*

Kesavaraja, M. (2010). *Poverty and Economics Support in Sri Lanka: The Case of Samurdhi Programme. University of Colombo. Department of Economics. .*

khan, M., & Rahaman. (2007). *Impact of Microfinance in living standards, empowerment, and poverty alleviation of poor people, Umea School of Business, Dept of Business Administration, Bangaladesh.*

அமலநாதன், & சி, (2012). *நுண்கடன் , அஸ்ரா பதிப்பகம், திருகோணமலை.*

Lanka, M. S. (2005). *Current Status and Issues in Sri Lanka: State of the Economy , Institute of Policy Studies Colombo.*

Maheswaranathan, S., & Kennedy, F. B. (2010). *Impact Of Micro-Credit Programs On Eliminating Economic Hardship Of Women, Retrieved From.*

Mallya, S. (2011). *Successful Entrepreneurs of Indian Origin, Department of Management Studies .உாநடுயெமை.*

அனோமா,கோ.(2000). *சிறுதொழில்கள் தொடர்பான கருதுகோளும் அண்மைக்காலபோக்குகளும்.* பொருளியல் நோக்கு, பக் 21-23.

Thilepan.M, T. S. (2011). *Microfinance And Livelihood Development In Poor Coastal Communities In Eastern Sri Lanka*, *Tropical Agricultural Research 22.*

Upali, T. &. (2005). *Micro finance in srilanka A household level analysis of outreach and impact on poverty" , University of Peradeniya.*